Nallur Branch Library

Subscription.
Inland: Rs. 100/- year
For Advertisement
Apply to:
The Manager,
'The Morning Star,'
182, First Cross Street
JAFFNA.

# THE MORNING STAR

Registered as a Newspaper at the General Post Office, Sri Lanka
under No. Q / J / 104 / News / 89
Established : 1841 : A Christian Weekly: Published Every Friday
Vol:- 150 Jaffna, Friday 12 January 1990 No:- 02
RIGHTEOUSNESS EXALTETH A NATION BUT SIN IS A REPROACH TO ANY PEOPLE

News and Articles in Tamil and English. Please send them to

THE EDITOR,
'The Morning Star,'
182, First Cross Street,
JAFFNA.

## The C. S. I. Synod

The 21st synod of the C.S.I. took place at the American College, Madurai, from the 13th to the 18th of January, 1988. Apart from reviewing the work of the Synod and its various departments for the previous two years the Synod took a major step in planning for a creative and imaginative programme of equipping the Churches at the congregation level for mission and outreach. The programme with its abreviation V E L C O M stands for Vision for Equipping Local Congregation for Mission. While many a good outreach and development programme has been carried out at Diocesan levels the congregations themselves have not been actively involved in this work. The new emhasis is now to get congregations to become concerned for its immediate surrounding and environment and engage in mission outreach work aimed at the total welfare of the community.

This Synod also resolved to limit the period of the office of the Moderator and General Secretary to two terms of two years each. The Rt. Rev. Dr. Victor Premasagar was elected Moderator and the Rev. M. Azariah re-elected as General Secretary.

## Our Bishop's Visits Abroad

Our Bishop had the privelege of participating in various conferences and consultations abroad during the last two years. In January 1988 he participated in the Sessions of the Programme to Combat Racism of the World Council of Churches in Los Angeles, California. As a member of this commission the Bishop also attended its Executive Committee meeting in Geneva in June 1988 and, the Commission's meetings in Madras from the 18th to the 24th of October, 1989. The Sri Lankan situation has also featured in the agenda of the PCR and the W C C has periodically put out statements on the issue. One of P C R's success story during this period is its involvement in Namibia and the positive developments in that country.

The Bishop made use of the visit to Los Angeles to visit our friends in the Indiana-Kentucky Conference of the UCC meeting the Revds. Quellhorst, Paul Jahn and other friends. They graciously hosted his visit and gave him an opportunity of presenting the situation in Sri Lanka and of the work of our Diocese. During the same trip he visited briefly in February the U C B W M in New York and various Church organisations in London, Uppsala, Oslo, Germany, Holland and Geneva.

In April 1988 from the 16th to the 21st the Bishop attended the Asia Regional Group of the World Council of Churches Commission or Inter Church Aid in Seoul, Korea.

From the 25th of April to the 12th of May the Bishop had an important engagement of being part of team visit to the United Church in Zambia from the Council for World Mission (CWM) London.

The C. S. I. is a member Church of the CWM and the Bishop was able to share with Church leaders and Christian groups in Zambia the experiences of the C.S.I. We have much to learn from the Churches in Zambia with their zeal for Evangelism and rapid Church growth. Zambian Church leaders mourned the fact that their people were "over preached and undertaught." This is true of our situation as well. In Zambia the team visited Churches in the Copperbalt, Kitwe and Lusaka.

On the 20th of May 1988 the Bishop attended the meeting of the Trustees of Jaffna College along with Mr. Rajan Kadirgamar the Principal of the College. It was again an opportunity to share our views and concerns. The Trustees were more keen and understanding and as always ready to help in appropriate ways. He visited the Rev. Jeyakumaran, then a student at the Andover Newton Seminary, Boston and together they worshipped on Whit-Sunday at the Newman Church of which the Rev. Paul C. Clayton is the Minister.

During this visit the Bsihop was able to visit Toronto and meet a large number of our Church members and friends there and also the Director and Staff of the Christian Children's Fund of Canada at their office in Scarborough,

From the 10th of December 1988 the Bishop along with the Rev. S. Jeyanesan attended a four days consultation of the Norwegian Church Aid organisation at Bangkok. This meeting again proved very valuable in planning our relief and rehabilitation programmes in the light of the experience of other Churches in other lands

In 1989 too the Bishop made three visits abroad twice to Norway and once to Geneva, In Geneva he attended an Ecumenical Consultation on Refugees arranged by the World Council of Churches on the 28th and 29th of September He represented the Christian Conference of Asia at this Consultation. He was able to meet with Sri Lanka Task Force also at the W. C. C. during this visit In Norway the Bishop attended first a four days Consultation of the Norwegian Church Aid from the 1st of June. Bishop Kingsley Swampillai of the Batticaloa Diocese of the Roman Catholic Church also participated in this Consultation. He later took part in Norwegian Church Convention from the 3rd to the 9th of July at Bodo in the North Norway. Archbishops Desmond Tutu and Makubulu from Southern Africa were also at this Convention. It was very encouraging to note the great interest evinced by the Norwegian Church leaders and Christian people in the problems of the Third World,

## Ten Years of Work South of Elephant Pass

For a greater part of our history, our Mission's work in Ceylon was confined to the Jaffna Peninsula. In the early forties of this century, we moved into Colombo to start our congregation there and in 1961 we moved into Paranthan to start the Medical Clinic for the benefit of the refugee settlers after the 1958 troubles.

We began mission outreach and development projects in a serious and organised way South of Elephant Pass when we posted the Rev. S.Jeyanesan as our Worker in that area in May 1979. We look back to the ten years of outreach work in that area with great gratitude to God. The work has been truly blessed of God. We ourselves find it hard to believe that there are now twenty eight centres of work manned by four Pastors and four assistant Pastors in that area. The crying need is for more workers. At almost all these centres there is a Day Care Centre catering to the needs of very poor children under five years and a community development programme based from the centre, Wherever there is a sizeable Christian community regular services are held. The Diocese decided to mark the Ten Years of Work South of Elephant Pass with a Thanksgiving Ssrvice at the Church of Christ the King, Kilinochchi on Saturday the 6th of October, 1989 at 10-00 a.m. Fellowship lunch followed. There were more than 700 participants at this function.

## Ten Years of Our Children's Homes & Day Care Centres

1989 also marks ten years of our recent work among children of the poor. The mission did run orhpanges in the earlier era, but the last of these were closed in 1961 when with the Government take over of Schools, Government Grants to the orphanages ceased. We revived this work with the starting of the Arulmanai boys' Home at Manipay in December 1979. Other Homes and Day Care Centres soon followed and we have today seven Children's Homes and forty-eight Day Care Centres and one Home for Disabled Children. There are 450 children in the Homes and nearly 2700 children in the Day Care Centres. We receive financial assistance for about 80 percent of the expenses from organisations like the KNH - Germany, Dutch Inter Church Aid and the Christian Children's Fund of Canada. Besides these we provide Hostel Scholarships to nearly one hundred and fifty students at Jaffna College and at the Uduvil Girls' College supported by the Trustees of Jaffna College Funds. The Christian Children's Fund of Canada also supports about three hundred more students attending various schools. This ministry we are convinced is proving an immense blessing to the poor families from which these Children come.

## More about our Homes & Day Care Centres

During the two years under review there have been some developments at our Homes and Day Care Centres.

### Harriet Winslow Girls' Home

At this Home we are happy to have completed the 1st and 2nd floors of the block for which we had completed the ground floor in March 1986. When the first floor was completed we had a function at which Dr. Mrs. Chandra Ambalavanar declared open that floor on the 4th of August 1988.. The building work proceeded and we were fortunate to have the Rev. Eric Gass of the UCBWM delcare open the second floor on the 29th of April, 1989. This Home has now enough accomodation for about 90 children. The Home also has a sizeable Poultry Unit to serve its needs.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Voices of A Silenced Nation.

**(continued from 5-1-90 issue)**

However one woman said to us:

> "We choose to use the word 'racism'. People draw the lines by racist connotation. Even if 'ethnicity' would prove to be intellectually correct, it is still used primarily to soften the issues. People who want to talk about ethnicity' instead of racism are the same ones who speak of 'gender relations' rather than 'sexism' (Voice No 21)

When one listens to the disavowal of racism, the best case that can be made for this position is that the Sinhalese are fearful that racism analysis prevents the world from seeing the problems that the Sinhalese face. The Sinhalese have great difficulties and there needs to be attention given to these. However our role continues to be to raise the conditions of racism that do, in fact, continue to exist in Sri Lanka. Moreover, it is important to note clearly that racism could be the source of more difficulties than is immediately apparent.

> "We have missed the real issue - allowing the Tamils to have their aspirations fulfilled. If this is addressed it will go a long way to solve all our problems. No problems will be solved until this one is. The rights of the racial minority need to be protected. (Voice No 22)

There is racism in Sri Lanka and while we need to be sensitive to all the people of this country, any efforts that result in silencing the naming of racism only prolongs the suffering of all the people.

BREAKING THE SILENCE

**Psalm 72 : 12 - 14** "Yahwah rescues the poor who call to Yahweh, and those who are needy and neglected. Yahweh has pity on the weak... and saves the lives of those in need. Yahweh rescues them from oppression and violence. Their lives are precious to Yaheweh"

The central message we received in Colombo is that the global community is ignorant about what is really happening in Sri Lanka.

> "There are over a 100 killings a day in Sri Lanka. More than in Palestine. More than in Lebanon. Even more than in South Africa. But no-one knows. Why doesn't the world know?" (Voice No 23)

Even the formerly effective Tamil network seems to have been jammed by the regional and global media power of the Indian government. The people of Jaffna indicated that there is a message they want the world to hear amd they want the WCC to speak it:

1. There is needless killing all over Sri Lanka. Tamil and Sinhala people are dying. Let the world know this.
2. There is no civil administration in the North and East. There is only martial law.
3. There is no Tamil controlled communication in the region. No. TV, no radio, and no newspaper. They have all been closed down.
4. This situation could explode anytime.
5. This situation will be resolved when Tamil people have their security. Security for us consists of keeping our land, having full citizenship rights. maintaining our language, the devolution of powers to the provinces, and having equal access to education, employment and human services.

As a result of this input, in both Colombo and Jaffna, the PCR team makes these recommendations, all of which arise from specific experiences and conversations:

1. That the Programme to Combat Racism (PCR) and the World Council of Churches (WCC) will do everything possible to alert the world to the actual conditions in Sri Lanka.
2. That the WCC will support the presence of the International Red Cross that has finally been invited to Sri Lanka.
3. That PCR urge the Commission of the Churches on International Affairs (CCIA) of the WCC to involve itself more deeply in Sri Lanka immediately and respond from its own perspective.
4. That strategies be developed that could culminate in the presence of United Nations Peace Keeping troops in Sri Lanka.
5. That PCR will undertake annual personal visits to Sri Lanka and stay in contact with the National Christian Council of Sri Lanka and the Church of South India in Sri Lanka.

MEANWHILE, UNSPOKEN HOPE

**Psalm 119:147** "Before Sunrise I call to you for help. I place my hope in your promise."

The people of Sri Lanka are undergoing an extraordinary ordeal. Their words are not filled with hope. But one sees hope in their actions, sometimes quite simple.

In 1983 a Tamil family, just after the pogrom against the Tamils and at the same time that four adult sisters and brothers left for other countries, built a new house in Colombo and named it 'our House of Hope'.

With thousands of refugees stranded in Jaffna during the worst atrocities of the IPKF, and when there was no safe way to transport food gathered from around the world in Colombo, Church of South India pastors drove back and forth, inspite of the danger, to deliver food to Jaffna.

A hospital, formerly occupied by the IPKF and pock-marked from violence, serves out-patients while patiently waiting for the people to trust they can stay overnight to have their medical needs met, without reprisals from the IPKF.

One person said: "In Jaffna, when the bombing stops the children go to tuition (school)." (Voice No 24).

A group of Tamil and Sinhala religious leaders in Colombo are meeting to prepare a statement for justice and peace in Sri Lanka. They are riskily preparing this statement for signatures and it will then be published and circulated.

Picture a line of young girls around 12 or 13 years of age dressed in their white school uniforms with blue bows blowing as they walk along. Picture them laughing, giggling, talking and carrying on with their lives as they pass the IPKF soldiers who have their guns pointing nonchalantly at the girls, seemingly unaware of the joy of girls.

Prepared by the members of the Sri Lanka PCR Team Visit, namely:

The Rev Dr. Yvonne Delk
Ms Erica Kyle (Australia)
Dr. Jeane Sindab (PCR staff, Geneva)
The Rev Joe Agne (USA)



# BETHLEHEM

**by Peter Schutt, translated from the German by Robert Porter**

If we discount, all
that pious legend has added--
ox, ass, shepherds in the field,
angels, the star, and the Three Kings,
virginity and theology,
there remains an event
that happens every day in the Third World:
somewhere between Delhi and Benares,
between Bahia and Santiago,
between Saigon and Danang.
Without the care of a physician, undernourished,
vagrant, and with little assurance that the
father is reliable,
a woman brings a child into the world,
which either lives or dies with its mother;
still in the cradle, it languishes away,
dies of hunger or of consumption.
From time to time a little mite like this
has good luck; he becomes familiar with
hospital and school
and gets enough to eat. Then the Wise Men
from the Orient proclaim: a human being
has become a human being. Rather certain, that he,
should he try to assert his claims,
will come into conflict with the authorities.
They'll finish him off, and those less courageous
will celebrate him as a martyr;
the murderers will embellish his life story
until it has become easy to live with
and, well, Christmasy.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதய தாரகை

UTHAYATHARAKAI

Estd. 1841.

மலர் 150 12 - 01 - 1990 [இதழ் 02


## "வருக சமாதானப் பிரபுவே"

பட்டமரங்கள் தழைத்திடவே
பசுமைப்பனி வசந்தத்தை அளித்திடவே
கொட்டுகின்ற பனிமழையின்
கொடுங்குளிர் வேளைதனில்
மாட்டுத் தொழுவம்தனில்
மனுமைந்தனாய் வந்தவரே
பாட்டாளிகளின் தலைவனாக—உமைப்
பாடி அழைக்கின்றோம் நீர்வருக.

இருள்சூழ் உலகையா
அருள் ஒளி சுடர்விட
பரமன் குமரனாகஇப்
பாரினில் வந்துதித்தோனே
பாருமையா மக்கள் படும்பாட்டை
பார்வேந்தே பாருமையா
கூறுமையா ஆறுதலொன்று
கூவிஅழைக் கின்றோம் நீர்வருக.

பிள்ளைகள் இல்லாத பெண்ணோ பெருமூச்சு
பிள்ளையில்லை யென்றோ உம்மிடம் முறைப்பாடு
பிள்ளைகள் நிறைவு பெற்றோர் வளர்ப்பதற்குப் பெருமூச்சு
பிள்ளைத் தடுப்புக்குக் குடும்பக் கட்டுப்பாடு.

சீதனப் பிரச்சினையினால் சீர்குலைவு இங்கு
சிறைப்பட்டு இருக்கும் பெண்கள்
வேதனையில் வேதாந்தி உனையே வெறுப்பு
வேண்டாம் இவ்வுலகம் என்றா நினைப்பு.

வள்ளலே உம்வருகையினால் எள்ளளவும்
பள்ளம் மேடிலாது பார்க்க வேண்டுமென
உள்ளம் குமுறி அழைக்கின்றோம்
நல்லாயனே நீர் வருக வருக.

வேலையிலா மக்களிங்கு வேதனையே ஏராளம்
வேதியனே உன்வருகை—ஒளி
நாளை உருவாக்கும் வழியைச் சமைக்க
நாடுவோம் நாட்டுவோம் சமாதானப் பிரபுவே நீர்வருக.
நீர் வருக! நீர் வருக!

## சிந்தனை 46.

ஏசாயா 6:9—13.

கல்விகற்கும் மாணவன் தொடக்கம் இல்லறம் நடத்தும் மக்களும் ஏனையோர் எல்லோருமே எது வரைக்கும் என்று கால எல்லையை முன்வைத்துக் கேள்வி எழுப்புவது இயல்பு. இறைதரிசனம் பெற்றும் இறை அறிவு பெற்றும் அழைப்பும் அழைப்பாணை பெற்றும் நின்ற ஏசாயாவுடைய உள்ளம் கால எல்லையின் அடித்தளத்தில் நின்று எது வரைக்கும் என்ற கேள்வியைக் கேட்டபோது,

இறைவன் நாளேட்டின் கால எல்லையைத் தராது சரித்திர மாற்றத்தை எல்லைக்கோடாக ஏசாயாவுக்குக் காண்பித்தார். ஏசாயா 6:11—12.

புதிய வரலாறு ஆரம்பமாக வேண்டுமானால் பழமையான வரலாறும், இறைவனை மையப்படுத்தாது மனிதனை மையப்படுத்தி

**வண. ஆ. வே. இயேசுதாசன்**

வளர்ந்து செல்லும் வரலாறும் முடிவுக்குக் கொண்டுவரப்படவேண்டும். அப்போதுதான் புதிய வரலாறு உதயமாகுமென்று ஏசாயா 6: 11 வசனம் தொனி செய்கின்றது.

முடிவை நோக்கி வளரும் தேசத்தின் நடுமையம் வெறுமையாக வேண்டும் என்றும் வெறுமையாக்கும் பணி நிறைவாக நடந்தால் குறைவிலா இறை ஆட்சி நடைபெறும் என்றும் தொனி செய்கின்றது ஏசாயா 6:13 வசனம்.

இரண்டு பாத்திரங்களில் ஒரு பாத்திரம் பசும்பாலை உள்ளடக்கி வைத்திருக்கின்றது, மற்றையது நீரை நிறைத்து வைத்திருக்கின்றது. நீர் உள்ள பாத்திரத்தில் பாலை நிறைக்க வேண்டும் என்ற விருப்பு ஒருவருக்கு ஏற்பட்டால் முதலில் நீரை அகற்றிப் பாத்திரம் வெறுமையாக்கப்பட வேண்டும் நீர் அகற்றப்படாதவரை அப்பாத்திரம் பாலால் நிரப்பப்படவே முடியாது. இங்கே வெறுமை என்ற சொல் கருத்துக்கு விருந்தாகின்றது வெறுமையான ஒரு இடத்தையே இறைவன் தன் பணி மனையாக்கிக் கொள்ளுகின்றார். என்பதை ஆதி 1ம், 2ம் வசனம் தொனி செய்கின்றது.

வெறுமையாக இருந்த பூமியை இறைவன் அழகு படுத்தினார் என்றும் வெறுமையான இடத்தில் ஆவியானவர் அசைவாடினார் என்றும் ஆதி 1:2 ஆம் வசனம் கூறுகின்றது.

வெறுமை இருந்தது. ஆவியானவரின் அசைவும் இருந்தது. ஒளி இருக்கவில்லை. இறைவன் ஒளியைத் தந்தார். புதிய சரித்திரம் உருவானது. ஆதி 1:3.

ஆதியாகமம் 1:2—3 ஆம் வசனங்கள் கூறும் உண்மை ஏசாயா 6: 12 இல் பிரதிபலிக்கின்றது.

இன்று நமது சரித்திரம் ஒளிமயமாக வேண்டும் என்று சிறு பிள்ளை முதல் குடு குடு தாத்தா வரை எதிர்பார்த்து இருப்பது எல்லோரும் அறிந்த உண்மை. இவ்வுண்மை ஏன் கண்முன்னே உண்மையாக வந்து சேரவில்லை.

நமது நாட்டின் நடுமையம் வெறுமையாகவில்லை. அரசியல் என்று கூறப்படும் நடுமையம் எப்போ வெறுமையாகின்றதோ அப்போ ஆவியானவர் அசைவாடுவார். இருள் எங்கும் படரும், இக்கால கட்டத்திலேதான் ஒளி உருவாகும்.

அரசியலின் பிடிவாதம் நான் என்ற ஆணவம் அன்பு இல்லாத அரசியல்ப் போக்கு இவை அகன்று அரசியலில் வெறுமை ஏற்படவேண்டும். இஃதே போன்று சமுக சமய தனி மனித வாழ்விலும் வெறுமை ஏற்படவேண்டும். வெறுமையில் இருந்துதான் புதிய வரலாறு உருவாக முடியும். இறைவனின் பணி வளருவதற்கு உள்ளத்தில், உணர்வில் வெறுமையான சமுகத்தை இறைவன் விரும்புகின்றார்.

## செய்திகள்:

### விடுவியுங்கள்.

நீண்ட காலமாகக் கைதாகி, வடகிழக்குப் பகுதிகளிலுள்ள இந்திய அமைதிப்படை முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 2 ஆயிரத்துக்கு மேற்பட்ட அப்பாவிப் பொதுமக்களையும், 300 க்கு மேற்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகளையும் விடுதலை செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தினர், இந்தியப்பிரதமர் திரு.வி.பி. சிங்கைக் கோரியுள்ளனர்.

ஒரு நல்லெண்ணத்தை எடுத்துக் காட்டும் முயற்சியாக இதனைச் செய்யவேண்டுமென்றும் பிரதமரை இவர்கள் கேட்டுள்ளனர்.

### தொடர்ந்தும் பதவி.

பிரிட்டிஷ் பிரதமர் மார்கரெட் தட்சர், தனது 14 ஆண்டுக்கால ஆட்சியில், தனது தலைமைப் பதவிக்கு முதல்த் தடவையாக சவால் ஏற்பட்டிருக்கும் நிலையில், பலத்த கரகோஷங்களுடன் பார்லிமென்ரில் வரவேற்கப்பட்டார்.

தொடர்ந்து பதவியில் இருக்குமாறு கேட்கப்பட்டதற்கு அவர் இணக்கம் தெரிவித்தபோது கரகோஷம் இடம்பெற்றது.

1990 ஆம் ஆண்டுகளிலும் தொடர்ந்து நீடிக்கப்போவதாக, தட்சர் கூறிய போதிலும், தாம், தலைமைப்பதவிக்கு அவருடன் சவால் விடப் போவதாக, சேர் அந்தனி மெயர் முன்பு கூறியிருந்தார்.

அப்போது பிரதமர், நான் நன்றியுடையவளாக இருக்கிறேன். நீங்களும் உங்கள் தொகுதி மக்களும் சரியான நிலையையே கடைப்பிடிக்கிறீர்கள் எனக் கூறினார்.

திருமதி தட்சர் டெலிவிஷன் பேட்டி ஒன்றில், 'எனது தலைமைக்குச் சவால் ஏற்படுவது கட்சிக்கும், நாட்டுக்கும் தீமையானது' எனக் குறிப்பிட்டார்.

ஆனால் கட்சி அங்கத்தினர்கள் தனக்கு எதிராகப் போட்டியிட உரிமை பெற்றிருக்கிறார்கள் என்பதையும் அவர் குறிப்பிடத் தவறவில்லை. அதே சமயம் 1992 ஆம் ஆண்டுக்குப் பின்பும் தலைமை வகிக்கத் தாம் விரும்புவதாக, தட்சர் கூறினார்.

தனக்கு வெற்றி கிடைக்காது எனத் தெரிந்த போதிலும் தலைமைப் பதவிக்குப் போட்டியிடவிருப்பதாக 69 வயதான மெயர் கூறியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

### ராஜீவ் தரும் செய்தி.

"நடந்து முடிந்த பாராளுமன்றத் தேர்தல்களில் மக்களின் தீர்ப்பை, நாம் தலை வணங்கி ஏற்றுக் கொள்கிறோம். தேர்தல்களில் வெற்றி பெறுவதுண்டு, தோல்வியடைவது உண்டு. ஆனால் தேசப்பணி முடிவதில்லை."

இவ்வாறு முன்னைநாள் இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி நாட்டு மக்களுக்கு வானொலி, தொலைக் காட்சி மூலம் விடுத்த செய்தி ஒன்றில் தெரிவித்தார்.

காங்கிரஸ் பாராளுமன்றக் குழு, செயற் குழுக் கூட்டங்களுக்குப் பிறகு அவர் இந்த உரையை ஆற்றினார்.

பாராளுமன்றக் குழுவால் அதன் தலைவராகத் தெரிவுசெய்யப்பட்ட சில மணி நேரத்தில் ராஜீவ் காந்தி உரையாற்றினார்.

அவர் தனது உரையில் மேலும் கூறியதாவது:-

"புதிதாக அமையவிருக்கும் அரசாங்கத்துக்கு நாம் ஆக்கபூர்வமான ஒத்துழைப்பினை வழங்குவோம்."

"ஜனநாயகம், மத சார்பின்மை, அணிசேராமை என்பவையே இந்தியாவின் உயிர் நாடி. மத சார்பின்மை இல்லாது இந்தியா நிலைக்க முடியாது.

"நானும், லட்சக் கணக்கான காங்கிரஸ் தொண்டர்களும் எங்களை, நாட்டுக்கு உழைப்பதற்காக மீண்டும் அர்ப்பணிக்கிறோம்."

### பாலர் கல்வி.

காரைநகர்ப் பகுதியில் பாலர் கல்வியை மேம்படுத்தும் நோக்குடன் அப் பகுதியிலுள்ள சகல சிறுவர் பாடசாலைகளையும் கொத்தணி அதிபரின் மேற் பார்வையின் கீழ் இயங்க வைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இங்குள்ள சிறுவர் பாடசாலைகளில் கல்விகற்பிக்கும் ஆசிரியர்களுக்குப் பல தொடர் பயிற்சிகளை ஒழுங்கு செய்து நடத்தி வரும் வாரி வளவு நல்லியக்க சபையினர் பிரஸ்தாப ஆசிரியர்கள் இதுவரை பெற்றுக்கொண்ட பயிற்சி தொடர்பாக மதிப்பீடு ஒன்றையும், மேற்கொள்ள இருக்கின்றனர் என்று சபையின் செயலாளர் ச. பத்மநாதன் தெரிவித்தார். காரைநகர்க் கொத்தணி அதிபரினால் மேற்கொள்ளப்படும் இம் மதிப்பீட்டின் போது தகுதியற்றவராகக் காணப்படும் ஆசிரியர்களுக்குக் குறுகிய காலப்பயிற்சி ஒன்றும் அளிக்கத் திட்டமிடப் பட்டு இருக்கிறது.

### உங்களுக்குத் தெரியுமா?

"மக்மோகன் எல்லைக் கோடு" என்பது; 1914 இல் பிரிட்டிஸ் காலனித்துவ அதிகாரிகளினல் உருவாக்கப்பட்ட சர்வதேச எல்லைக் கோடு.

1945 ஆகஸ்ட் 6 ஆந் திகதி அமெரிக்காவினல் ஜப்பான் ஹிரோஷிமா நகரத்தின் மீது போடப்பட்ட அணு குண்டின் பெயர்: முதலாவது ஒல்லி மனிதன். (Thin Man) அதே ஆகஸ்ட் 9-ல் நாகசாகித் துறைமுகமருகே போடப்பட்ட அணுகுண்டின் பெயர்: கொழுத்த மனிதன். (fat man)

ஆசியா, ஐரோப்பா இரு கண்டங்களுக்கும் பங்கான நிலப்பரப்பினைக் கொண்ட மிகப் பெரிய நாடு: சோவியத் ஒன்றியம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உங்கள் வினாக்களுக்கு விடைகள்.

1. வினா: மனிதன் பேசக்கற்ற பின்னரே 'கடவுள்' என்ற சொல் தோன்றிற்று. எனவே, கடவுள் மனித கற்பனையல்லவா?

விடை: 'கடவுள்' என்ற சொல்மட்டுமன்று, அகராதியிற் காணப்படும் எல்லாச் சொற்களுமே மனிதன் பேசக் கற்றபின்னரே தோன்றின. நமது உள்ளத்தில் உள்ள எண்ணங்களை- கருத்துக்களை வெளியிடும் வாகனமே சொல். காட்சிப் பொருளாவது, கருத்துப் பொருளாவது இல்லாவிடில் கருத்தில்லை, கருத்தில்லாவிடில் சொல் இல்லை. 'எலக்ட்ரான்' என்ற சொல், இந்த நூற்றாண்டில்தான் வழங்கப்படுகிறது. இவ்வாதத்தின்படி 'எலக்ட்ரான்' என்பதே உலகில் இல்லை என்றும், அதுவும் மனித கற்பனையென்றுமாகும் அல்லவா? 'எலக்ட்ரானை' மனித கற்பனை என்று பகுத்தறிவுள்ள எவனும் சொல்லமாட்டான். ஆதலால் பேசக்கற்றபின் 'கடவுள்' என்ற சொல் வந்ததால் 'கடவுள்' இல்லை என்று பொருள்படாது, இது மனித கற்பனையுமாகாது என அறிக.

2. வினா: என் செபத்திற்குப் பதில் கிடைக்காதது ஏன்?

விடை: நாம் கடவுளின் விருப்பத்தின்படி விசுவாசத்துடன் செபிக்காதபடியால், நமது செபங்களுக்கு நாம் எதிர்பார்த்தபடி பதில் கிடைப்பதில்லை. ஒரு கமக்காரன், தன் வயலில் விளைந்த கதிர் நாசமாகும் என்று கருதி மழைவேண்டாம் என்று செபித்தால், அது அருளப்படமாட்டாது. ஏனெனில், ஒருவனுக்கு மட்டும் நன்மையாகத் தோன்றுவது, பல்லாயிர மக்களுக்குச் சேதமாயிருக்குமல்லவா? மாந்தோப்பைக் குத்தகையெடுத்தவன் காற்று வேண்டாமென்று செபித்தாலும், எதிர்க்காற்றில், சைக்கிளில் போகிறவன் காற்று வேண்டாமென்று செபித்தாலும் அது அருளப்படமாட்டாது. ஏனெனில் அது, பிறர் நலன்களைப் பாதிக்கும். பின்வரும் வேதப்பகுதிகளை ஆராய்ந்து பாருங்கள்.

1. இரா. 19:4; 2. கொ. 12:8, 9; ஆபகூக். 2:3; மாற். 4:3 5-41

## தூய ஆவியரைப் பெற்றபின் நாம் என்ன செய்யவேண்டும்?

1. ஆவிக்கேற்றபடி நடக்கவேண்டும்—கலா. 5:25.
2. ஆவியினாலே நடக்கவேண்டும்—ரோ. 8:14; கலா. 5:16, 18.
3. தூய ஆவியரைப் பெற்றவர்கள் மீண்டும் ஆவியினால் நிரப்பப்படவேண்டும்—எபே. 5:18.
4. ஆவியில் அனலாயிருந்து எரிந்து பிரகாசிக்க வேண்டும்—ரோ. 12:11; வெளி. 3:15, 16; யோ. 5:35.
5. தூய ஆவியரைத் துக்கப்படுத்தக் கூடாது—எபே. 4:30.
6. தூய ஆவிக்கு எதிர்த்து நிற்கக் கூடாது—அப். 7:51.
7. ஆவியை அவித்துப் போடக்கூடாது—1. தெச. 5:19.
8. ஆவியின் கனி கொடுக்க வேண்டும்—கலா. 5:22, 23.
9. பூமியின் கடைசிப் பரியந்தமும் கிறிஸ்து இயேசுவுக்குச் சாட்சிகளாக வேண்டும்—அப். 1:8.

நீங்கள் விசுவாசிகளான போது பரிசுத்த ஆவியைப் பெற்றீர்களா? அப். 19:2; அப். 2:38, 39; 5:32.

## பசியாமல் புசியாதே

'ஒடிசலான உடம்பே ஒய்யாரமானது' என்று கூறுவதில் ஒன்றும் தப்பில்லை. ஆங்கிலத்தில் இதனை 'சிலிம்இஸ் பியூட்டிபுல்' என்று கூறுவர். கீழை நாடுகளில் உள்ளவர்களுடன் ஒப்பிடுகையில் மேலைத்தேசவாசிகளில் பெரும்பாலானோர் பருத்த சரீரத்தினை உடையவர்களாகவே காணப்படுகின்றனர். இதற்கான காரணம் என்ன?

தட்ப வெப்ப நிலையா? மிதமிஞ்சிய சாப்பாடா? பரம்பரை அலகா? ஆனால் இதற்கு வைத்தியர்கள் கூறும் விளக்கங்கள் என்ன தெரியுமா?

சின்னஞ்சிறு வயதிலிருந்தே இனிப்பு வகைப் பொருட்களை குழந்தைகளுக்கு கொடுத்துவந்தால் அவர்கள் மிதமிஞ்சிய குண்டுப் பிள்ளைகளாக மாறிவிடுவார்கள். சீனிச்சத்தின் செறிவும் உடலைப் பருமனடையச் செய்கிறது.

உடலிலே அதிகளவு சீனிச்சத்து சேர்வதால் சிறுவர்கள் மட்டுமல்ல சகல வயதினரும் பாதிப்படைகின்றனர் என்பது ஒன்றும் புதியதொரு சங்கதியுமல்ல, பல்சொத்தை, இரத்த அழுத்தம், இருயநோய், சலரோகம் போன்ற வியாதிகளும் எமதுடல்களைப் பிடிக்கின்றன.

இச்சீனி வியாதிகளைக் கட்டுப்படுத்துவதற்கு டாக்டரை மட்டும் நாடாமல் இருக்க, சிறந்தவழி எது தெரியுமா? நாவைக் கட்டுப்படுத்தல்தான். இனிப்புப் பதார்த்தங்களைப் பார்த்தவுடன் சிறுபிள்ளைகளுக்கு மட்டுமல்லாமல் பெரியவர்களுக்கும் நாவில் ஜலம் ஊறுவதென்னவோ இயற்கைதான். ஆனால் அதற்கு அதிக இடம் கொடுக்காமல் மனக் கட்டுப்பாடு அவசியம்.

அதிகளவு இனிப்பு உணவுகளை சேர்த்துக்கொள்ளுதல் கூடாது. எமது நாட்டில் சீனி விலை விஷம் போல் ஏறிக்கொண்டு போகிறதே. என்ன செய்யலாம்? மாதாந்தச் சம்பளத்திலோ, நாளாந்த கூலியிலோ கணிசமான தொகை சீனிக்காக செலவிடப்படுகிறதே என அங்கலாய்ப்பவர்களுக்கு, வேதனையுறுபவர்களுக்குச் சீனிப்பாவனையைக் குறையுங்கள் என்பது ஆறுதலளிக்கலாம் உண்மைதான்.

வளர்ச்சியடைந்த நாடுகளில் பெரும்பாலான பெற்றார் கல்வியறிவுடையவர்களாகத் திகழ்வதனால் தம் குழந்தைகளின் உடல் நலத்தில் மிக அக்கறை உடையவர்களாக இருக்கிறார்கள்.

பிரிட்டனின் உணவுத்திட்ட மருத்துவக் குழுவின் அறிக்கையின்படி பாடசாலைச் சிறுவர்களின் பெரும்பாலான உணவாக பாண், பால், பிஸ்கட், சிப்ஸ், கேக், புடிங் என்பவையே இருந்தன. இவ்வுணவுகள் பதினான்கு, பதினைந்து வயது ள பெண்களுக்கு, போதிய போஷாக்குள்ளவையாக தோன்றவில்லை.

இரும்புச்சத்து, கல்சியம் என்பன குறைந்தளவே இருந்தன. அமெரிக்கசிறார்களில் பெரும்பாலானவர்களுக்கு 'கொலர்ஸ்ரோல்' வியாதி உண்டு. இரத்த நாளங்களில் இக்கொழுப்புப் படிவதால், குருதிச்சுற்றோட்டத்திற்கான தடை ஏற்படுவதுடன் இதய நோயும் உண்டாகின்றது. இதற்காக இளமைப் பிராயத்திலேயே, அதனைத் தடை செய்வதற்கான பிரசார நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

ஐந்து வயதிற்கு உட்பட்ட குழந்தைகளுக்கு உணவு கொடுக்கும் விடயத்தில் தாய்மார் அதிக கவனம் செலுத்த வேண்டும். ஏனெனில் இப்பருவத்தில் தேவையற்ற கலோரிகள் உடல் வளர்ச்சியைத்தான் மிதமிஞ்சி ஏற்படுத்தும், குழந்தை கொழுப்பதைத், தடை செய்ய விரும்பினால் சீனி கலக்காத வெறும் பாலையே கொடுத்துப் பழக்கவும், சீனியை அதிகம் கொடுந்தால் இழையங்களை அதிகம் உண்டாக்கி ஊட்டச் சத்துக்களை உறிஞ்சக் கூடிய தன்மையைத் தடை செய்துவிடும்.

சிறுகதை.

## "24-ம் தேதி நடுச்சாமம் 12 மணி...."

5-1-90 தொடர்ச்சி...

இப்படியெல்லாம், கிறிஸ்ரினாவின் தாயான மேரியின் வாயிலிருந்து தொடங்கி, அண்ணன் ஸ்ரீபன் மூலமும், தாய்மாமன் ஜோசெப் மூலமும் தொடர்ந்து, உறவினர் வரை முடிந்த வசனங்களெல்லாம், கிறிஸ்ரினாவைப் பொறுத்தவரை, தாமரை இலையில் நீராகத்தான் உருண்டன.

''சூரியனின் பாதையில் மாற்றமில்லை. அதற்கென்று ஒரு பாதையிருக்கிறது. அந்தப் பாதையில்தான் இனியும் அது பவனிவரும்...'' இந்தத் தொனியில் கூறிவிட்டு, அங்கிருந்து அகன்றுவிட்டாள் அவள்.

அவள் ஒரு ஆசிரியை. கண்டி மாநகரிலிருந்து தெற்கே பன்னிரண்டு, பதின்மூன்று மைல்கள் தூரத்தில் அமைந்துள்ள தலாத்துஓயா மாவட்டத்திலுள்ள கிராமப்புறத் தமிழ்ப் பாடசாலையொன்றில்த்தான், சங்கீத ஆசிரியையாகக் கடமையாற்றுகிறாள் அவள். இசை பயிற்றுவதோடு, நடனமும் சொல்லித் தருகிறாள். பரதநாட்டியம்- கதாக்களி-கிராமிய நடனம் போன்று பல்வகையான நடனங்களையும், மக்கள் ரசிக்கக்கூடிய பாணியில் அமைத்து, மக்கள் பார்வைக்கு வழங்கும் திறமைசாலியென்றே அவளைச் சொல்லவேண்டும்.

இசையின் மூலமும் நடனத்தின் மூலமும் மக்கள் மத்தியில் நல்ல நிவை-பண்பை- நாகரிகத்தை வளர்க்கச் செய்யலாம் என்பதில் அவளுக்கு அசையாத நம்பிக்கை. புதுப்புது நடனங்கள், சமுதாய நல்வளர்ச்சிக்கும் முன்னேற்ற நோக்குக்கும் தேவையான புதுப்புதுக் கருத்துக்கள் கொண்ட பாடல்கள் அவளது ஆக்கங்களாயின. அடிப்படை அறிவு வளர்ச்சியும்-பண்பாட்டு வளர்ச்சியும் அற்றுக் காணப்படும் தனது கிராமத்துப் பிள்ளைகளை, முன்னேற்ற வழியிலே வளர்த்தெடுக்க வேண்டுமென்ற துடிப்போடு செயலாற்றி வந்தாள் அவள்.

இவளின் கிராமமான நல்லைமலைக் கிராமம், தலாத்துஓயா ரவுணிலிருந்து தெற்கே இரண்டு மைல் தூரத்திலே அமைந்திருந்தது. நல்லைமலைக் கிராமப் பிள்ளைகள் பலர், இவளின் சிஷ்யர்கள் என்ற பெருமை பெற்றார்கள். ஆண்டுகள் கழிந்து கொண்டேயிருந்தன. நல்லைமலைக் கிராமம் கல்வியில் மட்டுமல்ல, பண்பாட்டிலும் மிளிர்ந்தது. ஆனாலும் அந்த நிலையை வளர்த்துக் கொண்டிருந்த கிறிஸ்ரினா...?

அவளுக்கு வயது போய்க்கொண்டேயிருந்தது. சமுதாயத்தை மட்டுமல்ல, தன்னையும் வளர்த்துக் கொள்ள முடிவெடுத்தாள் அவள். அன்று, அவளது பயண நாள். தனது சங்கீதத் துறையையும்- நடனத் துறையையும் மேன்மேலும் விருத்தி செய்ய வேண்டுமென்பதற்காகவே அவள் இந்தியா போகிறாள். அவளோடு அவளுடைய மாணவியான சசிகலாவும், சசிகலாவின் அண்ணன் றிஜிக்குமாரும் இந்தியா போகிறார்கள் படிப்பதற்காக. சசிகலா, இசைப்படிப்புக்காக- றிஜிக்குமார், பட்டப்படிப்புக்காக. தன்னோடு இந்த இருவரும் போவதால், தன்னுடைய வீட்டிலிருந்து யாரையும் கூட்டிச்செல்ல, கிறிஸ்ரினா விரும்பவில்லை.

கிறிஸ்ரினாவைக் கூட்டிக்கொண்டு இந்தியா செல்லும் நிலையில், ஸ்ரீபனும் இல்லை. இவ்வளவு காலமும் வேலையற்றிருந்த ஸ்ரீபனுக்கு, நுவரெலியாவிலுள்ள ரீ எஸ்ரேற் ஒன்றில் வேலை கிடைத்து ஒரேயொரு கிழமைதான். கடந்த கிழமை வேலையைப் பாரமெடுத்த ஸ்ரீபனால் இந்தக்கிழமை லீவ் எடுத்து இந்தியா போவதென்றால் அது, மனச்சாட்சிக்கு விரோதமான செயலாய்த்தானிருக்கும்; எஸ்ரேற் மேலிடமும் அதை விரும்பாது, கிறிஸ்ரினாவுக்கு அது தெரியாமலில்லை. அந்த வீட்டிலுள்ள மற்றொரு ஆண் துணை அவளது தாய்மாமன் ஜோசெப்தான்.

கொழும்புக் கச்சேரியிலிருந்து இரண்டு கிழமைகளுக்கு முன்தான் கண்டிக் கச்சேரிக்கு மாற்றலாகி வந்திருக்கிறார் ஜோசெப். ஒரு சில காரணங்களுக்காக, திருமணம் முடிப்பதில்லை என்ற பிடிவாதத்தோடு வாழும் அவர்தான் மேரிக்குத்துணையும் உதவியும்.

இந்த நிலையை அறிந்துதான், ''அம்மா, சசிகலாவும் அவள் தம்பி றஜிக்குமாரும் என்னோட இந்தியா வர்றாங்க படிக்கிறதுக்காக, அதனால நீங்க கவலைப்படாதீங்க, போனதும், கடதாசி எழுதிப் போட்டிடுவன்'' என்று கூறிவிட்டு, பயணமானாள் கிறிஸ்ரினா. காலங்கள் ஓடி மறைந்தன. முதல் ஏழு மாதங்களும் கிறிஸ்ரினாவின் கடிதங்கள் தவறாமல் வந்து கொண்டேயிருந்தன. அதன்பிறகு..., கடிதம் வரவில்லை- மேரிக்கு ஒரே சிந்தனை- ஒரே கவலை- நீரற்ற பயிர் பச்சைகள் போல அவளது உடலிலே வாட்டங் கண்டது. கிறிஸ்ரினாவை இந்தியாவுக்கு அனுப்பாமல், கிறிஸ்ரொபருக்குக் கட்டிக் கொடுத்திருக்கலாம், ஜாதியில் குறைந்தவனென்பதையும் பார்க்காமல், திருமணத்தை நிறைவேற்றியிருந்தால், பேரப்பிள்ளைகளைக் கூட, தன்னால்ப் பார்த்திருக்கமுடியும் என்ற நினைவுகள் அவளது மனதை-அவளது இதயத்தைக் குழியாக்கிக் கொண்டிருந்தன. வேதனையின் அடித்தளத்திலிருந்து வேதனையின் உச்சிக்குச் சென்ற மேரி இருதய நோயாளியானாள். ஏற்கனவே அவளைப் பீடித்திருந்த சலரோகத்தோடு இருதய நோயும் சேர்ந்து, அவளை அடிக்கடி டொக்டரிடம் போகவைத்தது.

( மிகுதி அடுத்த இதழில் )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தாரகை ஒளி:

வேலைக்குச் சோம்பன்கை சம்மதிக் காது;
சோம்பல்தன் ஞசையால் மடிந்தே போவான்.

— நீதிமொழிகள்- 21: 25 —

# எங்கள் கருத்து

## திருப்பணிவிடையாளர் கடமை.

இருபதாம் நூற்றாண்டின் இறுதிப் பத்தாண்டுக் காலத்தை அடைந்துள்ள நாம், கடந்த வாரம் யாழ்.பேராயத்தின் இரண்டு உதவிக்குருமார், குருமாராகத் திருமுன்னிலைப் படுத்தப்பட்டதைக் கண்டோம். இதையிட்டு இறைவனுக்கு நன்றி செலுத்துவதோடு, அடுத்து வரும் ஆண்டுகளில், புதிதாகக் குருமாராகத் தேர்ந்தெடுக்கப்படுகிறவர்களும், ஏற்கனவே திருப்பணிவிடையாற்றி வருவோரும், எவ்வாறு திருப்பணிவிடை செய்தல் வேண்டுமென மீளாய்வு செய்து, தூய ஆவியரின் வழி நடத்துதலைப் பெற்று உரிய ஒழுங்குகளையும், திட்டங்களையும் வகுத்தல் வேண்டுமென்பதையும் நாம் அறிதல் அவசியம்.

நமது சபைகளில், குருமாரைக் குறித்த ஒரு கருத்துருவம் (image) இறை மக்கள் மனத்தில் பதிந்துள்ளது. அதாவது. இப்பணிவிடையாளர், சபைப் பணிக்கெனப் பிரத்தியேகப்படுத்தப்பட்டு ஒதுக்கப்பட்டவர்கள்; இப்பணிக்கான சிறப்புப் பயிற்சி பெற்றவர்கள்; திருச்சபைச் சாக்கிரமந்துகளை முறைப்படி வழங்குதல், திருமணம் - மரணம் ஆகிய வாழ்க்கை நிகழ்வுகளுக்கு ஏற்ற ஆராதனைகளை நடத்துதல், திருமறையை, சபையாருக்கு எடுத்து முறைப்படி போதித்தல், கற்பித்தல், சபையார் வீடுகளைச் சந்தித்தல் ஆகிய பொறுப்புக்கள் இவர்களுக்குண்டு என்பதே அவர்கள் கருத்தாகும்.

ஆனால், இவைமட்டும் தான் திருப்பணியென எண்ணி நிறைவுகொள்ளும் நிலைமை வருந்தத்தக்கது. நமது சபைகளிற் பெரும்பாலானோர் இவ்வாறு எண்ணுவதால், இப்பணிகள் உயிரற்ற பாரம்பரிய சடங்குகளாக மாறிவிடுகின்றன. திருப்பணிவிடையாளரும், ஓர் உயிர்ப்பற்ற சடங்காசாரராக மாறிவிடுகின்றார். இயேசுபிரான், இத்தகைய ஆசாரப் பணிவிடையாளர்களைப் பற்றி "நல்ல சமாரியன்" உவமையில் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார். அதாவது, வழியில் அடிபட்டுக் கிடக்கும் அம்மனிதரைக் கவனிப்பதோ, அவருக்காகக் கவலைப்படுவதோ அவர்களுடைய சமய ஆசாரங்களுக்கு உட்பட்டதல்ல என்று அந்த ஆசாரியனும், லேவியனும் கருதினர். அதனால், குற்றுயிராய்க் கிடந்த அம்மனிதனைக் கடந்து சென்றனர்.

இதைப் போன்ற திருப்பணிவிடையாளர்கள் பலர், இன்னும் நமது சபைகளில் பணியாற்றி வருவதை நாம் காணலாம். பாரம்பரிய வழியில் வந்த பணிமுறைகளை மட்டும் கவனிப்பதில் அவர்கள் அக்கறை காட்டி வருகின்றனர். அதற்கு அப்பால், உலகில் - சமூகத்தில் நடக்கும் காரியங்களைக் குறித்து அவர்கள் கரிசனை காட்டுவதாயில்லை. 'அரசியலா? சமூகப் பிரச்சினைகளா? அவை எங்களுடைய பொறுப்பல்ல' என்று கூறுகிறார்கள். சில திருச்சபைத் தலைவர்களிடமும் இத்தகைய மனப்பான்மை உண்டு. இது மிகவும் வருந்தத்தக்கது.

இன்று, யாழ்.பேராயத்தில், பேராயரின் வழிநடத்துதலால், பல சபைகளில் ஒரு விழிப்புணர்ச்சி தோன்றியுள்ளது. திருச்சபையின் பணி, சபையின் நான்கு சுவர்களுக்கு உட்பட்டதல்ல; அது உலகிற்கு நேராக, குறிப்பாக, ஏழைகள் மத்தியில், செயல்படவேண்டியதொன்றாகும். திருப்பணிவிடையாளர் இதனைக் கவனித்து, தத்தம் சபைகளுக்கு அப்பால் உள்ள மக்களின் நலனில் கரிசனை கொண்டு. முழுமையான வாழ்வை இழந்து நிற்கும் அவர்கள், தங்கள் முழு வாழ்க்கையிலும் ஈடேற்றமடைய உதவி செய்வதே தமது தலையாய கடமையென நமது, திருப்பணிவிடையாளரிற் பலர் உணரத் தொடங்கியுள்ளனர். இது வரவேற்கத்தக்கது. இயேசு பெருமான், மக்களுக்கு வாழ்வு அளிக்கவும், அந்த வாழ்வை முழுமைபெறச் செய்வதற்குமே இவ்வுலகிற்கு வந்தார். ஆண்டவரின் இந்தப் பணியில் பங்கு கொள்ளவே திருப்பணிவிடையாளர் அழைக்கப்பட்டனர்.

இன்று, நமது சமுதாயத்தில், மூன்றில் இரண்டு பகுதியினர், வறுமைக் கோட்டின் கீழ் வாழ்கின்றனர். அவர்கள் முழு மனிதராக வாழ இயலாத நிலையில் வாட்டமுற்றிருக்கின்றனர். உண்ண ஏற்ற உணவின்றி, உடுக்க மாற்று உடையின்றி, ஒதுங்க ஏற்ற உறைவிடமின்றித் துன்புறுகின்றனர். வறுமையில் வாழ்கின்றஇம்மக்களுக்கு, செழுமையில் வாழ்வோர் எந்த விதத்திலும் உதவ முன்வராதது வருந்தத்தக்கதே ஆகவே, இன்றைய திருப்பணிவிடையாளர், சமய பாகுபாடின்றி, ஆண்டவர், இவ்வுலக மக்களுக்காகவே உயிர் நீத்தார் என்பதை உணர்ந்து, எங்கெங்கு தேவை காணப்படுகிறதோ, அங்கு வேண்டிய பணிகளையாற்றி, கடவுளை, இன்றைய சூழலில் ஆற்றிவரும் செயல்களில் முழுமையாக ஈடுபடச்செய்வதே திருப்பணிவிடையாளரின் கடமை.

## பசியாமல் புசியாதே

( 4ம் பக்கத் தொடர்ச்சி )

பெரும்பாலான நடுத்தரக் குடும்பப் பெற்றோர் அளவான சத்துணவையே தம் குழந்தைகளுக்குக் கொடுக்கின்றனர்.

சிறு பராயத்தில் உணவு உட்கொள்ளும் முறைக்கும் பின்னர் வயது முதிர முதிர ஏற்படும் உடல் நலத்திற்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. முப்பது வயது மட்டும் அமைதியாக இருக்கும் இதய வியாதிகள் பின்னர் வயது செல்லச் செல்ல தம் செல்வாக்கைக் காட்ட ஆரம்பிக்கும்.

பிள்ளைகள் தமது வயதிற்கு மீறிய நிறையைக் கொண்டிருந்தால் பெற்றோர் மருத்துவரை நாடுவது மிக மிக அவசியம்.

எம்நாட்டிலும் பெரும்பாலான தாய்மார் தம்பிள்ளைகள் சாப்பிடுவதில்லையே எனச் சொல்வதைக் கூட நாகரிகம் போன்று கருதிச் சொல்கிறார்கள். பிள்ளை வயதிற்கு மீறிய பருமனாக 'தளதள' வென்றிருப்பினும்-நன்றாக 'ஒரு பிடி' பிடித்தாலும் ஐயோ என்பிள்ளை எதைக் கொடுத்தாலும் வேண்டாமென்று தானே சொல்கிறது என மூக்கால் அழுவார்கள். பசி இல்லாவிட்டால் தடி எடுத்து வெருட்டியும் மருட்டியும் உணவை வாய்க்குள் திணிக்கும் பெற்றோரும் உண்டு. குழந்தைகளுக்கு உணவு கொடுக்கும் போது கட்டாயம் பசி இருக்கவேண்டும். பசி இல்லாமல் கொடுப்பது மிதமிஞ்சிய உணவு என்றே கருதப்படும்.

உணவு கொடுக்கும் போது கட்டாயமாக போஷாக்கான உணவு வகையே கொடுக்க வேண்டும். இனிப்பு வகைகள், மாப்பதார்த்தங்கள் அதிகம் கொடுப்பதனால் சதை தான் போடுகின்றதே தவிர குழந்தை ஆரோக்கியமாக வளர்வதில்லை. காய்கறி, பழங்கள் போன்றவற்றை அதிகம் கொடுக்கலாம்.

நொறுக்குத் தீனியுடனே சில பிள்ளைகள் எந்நேரமும் காணப்படுவர். அதனைத் தடை செய்யவேண்டும்.

எமது நாட்டில் பெரும்பாலான பெற்றோர் வயிற்றை முட்டவைப்பதைப் பற்றிச் சிந்திப்பதுண்டே தவிர போஷாக்கைப்பற்றிச்சிந்திப்பதில்லை. ஆனால் இப்பிரச்சனைகளை நிவர்த்திக்கும் பொருட்டு சுகாதார நிறுவனங்கள் அடிமட்டரீதியில் கருத்தரங்குகளை ஆங்காங்கே நடத்தி அறிவுரை வழங்குவதிலும் தவறவில்லை.

JAFFNA ACADEMY and SCHOOL of TECHNOLOGY
G.C.E. A/L —August 1990
RAPID REVISION CLASSES.

1990 – ம் ஆண்டுப் பரீட்சைக்கான துரித மீட்டல் வகுப்புக்கள் 15. 01. 90 இல் ஆரம்பமாகின்றன. பாடத் திட்டம், முற்றாக மீட்டல் செய்யப்படும். சேர விரும்புவோர், அக்கடமிக் காரியாலயத்தில் விண்ணப்பப் படிவங்களை, காலை 9.00 மணி முதல் 12.00 மணிவரை பெற்றுக் கொள்ளலாம்.

DIRECTOR.
376, MAIN STREET,
CHUNDIKULI.

## இல்லை, இல்லை.

இளைத்தநேரம் சிறிது தேநீர் அருந்தச் சீனி இல்லை பசித்த குழந்தைக்குப் பால் கிடைக்கவில்லை. புசிப்பதற்குப் போதிய உணவில்லை என்பவர்களது எண்ணிக்கை அதிகரிக்கிறது நாட்டிலே. அதுவும் நன்மைதானென்று சொல்வாரும் இல்லாமலில்லை. புதிய புதிய முயற்சிகள், வழிவகைகள் கையாளப்பட வழி திறக்கப்பட்டுள்ளது. தொழில் வளமும் உற்பத்தி வேலைகளும் பெருகுகின்றனவல்லவா!

அன்பில்லை, இரக்கமில்லை, அதனால் மழையுமில்லை; விளைவுமில்லை என்பாரையுங் காண்கிறோம். பதுக்கலும் விலையுயர்வும் இப்படிக் கூறவைக்கின்றன. நெல் புசலொன்று எழுபத்தைந்து ரூபாவுக்கு மேலாக நூறு ரூபா வரையில் விற்பவர்கள் இரக்கமுள்ளவர்களா எனக் கேட்போர் நியாயமற்றவராகார். தட்டுப்பாட்டைப் பயன்படுத்திக் கொள்ளை லாபமடிப்பவர் அன்பிலார் தானே. கொடுமை மலிந்தால் வானம் பொய்யாதென்செய்யும்? கொடும்பாவி கட்டி அழுதும் பார்க்கிறவர்கள் இல்லாமலில்லை,

உண்மையில்லை, நீதிஇல்லை நேர்மையில்லை, ஒழுக்கமில்லை என்பாரும் உண்டு. உறவிலே, பேச்சிலே, செயலிலே இவை காணப்படவில்லை. சொல்வதைச் செய்வதில்லை. செய்வதில் நேர்மையில்லை. எங்கும் எதிலும் இதை எடுத்துக் காட்ட முற்படுவார் இல்லாமல் இல்லை.

ஒற்றுமையில்லை, உய்யும் வழி இல்லை, உயர மார்க்கமில்லை என்பவர்கள் ஒரு பக்கம். சுயநலம் இல்லாத-மக்கள் நலங்கருதும் தொண்டரில்லை என்பவர்கள் ஒரு பக்கம். பிறர் துயர் கருதும் பெருங்குணத்தாரில்லை என்பவர் ஒருபக்கம்.

இவை இல்லாதவிடத்து ஏற்படும் இடர்களைக் கண்டும் இறைவனிடத்து அன்பு இல்லை. பக்தி இல்லை- பயமில்லை. அதனால் பயங்கரச் செயல்களுக்குக் குறைவில்லை. நாளேடுகளில் இத்தகைய செய்திகளுக்குக் குறைவில்லை.

இத்துயர் நீங்கி, இன்புற்று வாழ வழிஇல்லை என்று மாத்திரம் சொல்ல முடியவில்லை, கடவுள் பயமும், அவன் பணியில் ஆர்வமும் பிறக்கும்போது மனிதன் மாறுகிறான். கடவுளிடம் அன்பு செலுத்தி அவர் அன்பின் பெருக்கை உணர்ந்து பதில் செய்ய முற்படும்போது மக்களிடம், அன்பு, தானாய்ப்பிறக்கிறது மக்கள் சேவை மகேசுரன் சேவையாகிறது. இல்லாமை நீங்குகிறது. இன்பம் பிறக்கிறது, உலகமே இறைவனிருப்பிடமாய்க் காட்சி தருகிறது. பேரின்ப வாழ்வு இங்கு இப்பொழுதே கிட்டுகிறது. எச்சமயத்தோரும் கூறும் பரிகாரம் அனுபவமாகி இல்லாமை நீங்கி எல்லாம் உடைமையாகிறது.

இறைபன்றிக் குறை தீர்க்க வல்லார் யார்? அவன் நெறியன்றி இன்ப வாழ்வுக்கு வழியேது? தேட-காண- கடைப்பிடிக்க முயற்சிப்பார் இல்லையா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*EDITORIAL.*

# Remembering A Civil Rights Leader.

The U.S. Congress has mandated the observance of Martin Luther King's birth date as a national holiday on the third Monday in January, every year. This year the observance has a special significance chronologically, as the date of observance synchronises to the dot with King's birthday which falls on the 15th of January 1990, which is the third Monday of this year.

A man of vitality and vehemence King burst into the scene in American politics with the Montgomery bus boycott in US, sparked by a black woman named ROSA PARKS who refused to get up and take a back seat when a white man boarded the bus.

King, a Baptist Minister, standing out as a beacon of black statemanship in the land, along with a few other leaders held that a low profile accommodation for a segment of the population of U.S. is inadmissible by law in public transport and is a gross paradox in a country which believed that it is no trick to believe in freedom only when it is comfortable.

"Liberty," President Ford had said on the occasion of the Bicentennial in 1976 at Philadelphia Hall where representatives of 13 colonies signed the Declaration in 1776, "is a living flame to be fed, not dead ashes to be revered"

King and his compatriots refused to board a bus and walked anywhere and everywhere without boarding a bus so long as blacks were relegated to back seats. It was a peaceful protest.

Reason is a small voice but it is persistent. The atmosphere therefore became charged. It was not an easy time for King. Amidst the broken glasses and shattered window panes of his porch he stood, while wayfarers glanced, some ruefully others spitefully at the debris, and said "I have a Dream" first silently uttered as he looked on the scene of wreckage.

The Story of his well known eulogy later at this home church — the EBENEZER BAPTIST CHURCH — on the 4th of February, 1968 two months before his death, is well known to our readers. The words now publicly uttered "Say I was a drum major for justice. Say that I was a drum major for peace, for righteousness ...... I just want to leave a committed life behind," now belong to history.

Montgomery, Alabama, Selma, Birmingham, Little Rock and Arkansa are place names where lot of justice grew out of the pain that happened in these towns.

The concluding words of President Reagan in January 1986, addressing an audience of school children in an elementary school at Washington named after King on the first occasion of the observance of King's birth date as a Public holiday in U. S., are significant:—

> "Ultimately the great lesson of King's life was that he was a great man who wrested justice from the heart of a great country because that country had a heart to seize".


## MORNING STAR

We wish to inform our readers that due to rising costs and the increase in the pages of the Morning Star we have revised the annual subscription as follows:

| | | |
|---|---|---|
| **INLAND** | Rs. | 100-00 |
| **EUROPE, AUSTRALIA & MALAYSIA** (Air Mail) | Pounds | 10-00 or Equivalent |
| **U. S. & AFRICA** (Air Mail) | Dollars | 15-00 |
| **INDIA, PAKISTAN & BANGLADESH** (Air Mail) | Indian | Rs. 150-00 |


Registered as a Newspaper at the G. P. O. Sri Lanka under No. Q/J/104/89 News
Printed for the Jaffna Diocese of the Church of South India at American Ceylon Mission Press, 182,1st,Cross Street Jaffna on Friday, 12 January. 1990 and published by The Rev T. THEVANESAN 182, First Cross Street Jaffna

NEWS;

(Continued from page 1)

### Levi Spaulding Boys' Home

We regret we have not been able to proceed with the first and second floors of the block, the ground floor of which we completed in 1987. We trust we will be able to raise the funds to compelete it soon. We were however, able to add to the facility of the Home by purchasing a Water Tank adjacent to it and owned by Jaffna College. We paid a sum of Rs. 70,000/- for the Tank. The Home also now has a boundary wall on its Northern boundary.

### Shalomnagar Boys' Home

The Shalomnagar Farm project was started in 1982 and since then a strong community has grown around the Farm. A Day Care Centre was started in and it continues to function efficiently. We began to feel the need for a Boys Home at the Centre and started it on the 6th of October 1988. The Rev. A. Jeyakumaran, Secretary of the Council dedicated the Home. The Home has now forty-five boys of school going age. We are looking forward to improving the facilities of this Home as soon as possible. We purchased an ELF Van in January 1989 to transport the children daily to school.

### St. Peter's Girls' Home Vavuniya.

We started a new Girls Home in Vavuniya, purchasing a house on 12 Lachams of land at Rambaikulam within the Vavuniya town area. The Home was dedicated by our Bishop on the 20th of September 1989. There are 32 girls in the Home now between the ages of six and twelve. A temporary hall was added to the house and it is hoped to provide some more additions to increase the accommodation.

### New Day Care Centres.

The following Day Care Centres were opened during the last two years.

#### Niraivunallur

Niraivunallur is a new village at Shalambaikulam on the Vavuniya-Mannar Road about 10 miles from Vavuniya. A new building for a Church and Day Care Centre was completed and the centre was dedicated by our Bishop on the 11th of January 1989. The Day Care Centre has more than sixty children. The Rev. P. R. Navendranugoolan was responsible for starting the centre.

#### Anaicoddai

The Day Care Centre at the Anaicoddai Church was started on the 9th of January 1989 with prayer by the Bishop. To begin with the newly constructed Vestry of the Church and the Church itself was used. Now however a new building to house the Day Care Centre is nearly complete. The Rev. T. Thevanesan is the Manager of this Centre.

#### VELANAI

A Day Care Centre at the Velanai Church was started on the 23rd of January, 1989. This was declared open by the Bishop. The Rev. T. Thevanesan is the Manager of this Centre. Velanai once again has become an active Church Centre.

#### Araly.

The Araly Church members became keen to be involved in social uplift work in their immediate surrounding and decided to start a Day Care Centre for poor children. They extended the Lambert Hall in the Church Compound and added the necessary facilities for a Day Care Centre. The Bishop declared open this Centre on the 14th of August 1989. The Centre fulfilling a great need among the poor of the area.

#### Thevakiramam.

Thevakiraman is a recent colony that has sprung up near the Christa Seva Ashram and the Christian Theological Seminary at Chunnakam. The Diocese purchased a piece of land five lachams in extent from the Ashram to start a Community Development Centre there.
Mrs. Rammi Thambiappa laboured hard to get this Centre started. The Bishop declared open the Day Care Centre on the 22nd of August 1989. The Ashram and the Seminary students and Staff are also actively co-opera-in this programme.

#### Uduvil

The Udvvil Church Women's Fellowship started a Day Care Centre at the Church Parish Hall in April 1989. This is again serving ;he poor families in the community. Mrs. Rammi Thambiappa is again the person largely responsible to get this project started.

Loving Memory
of

11th Year

**Brigadier Y. David**
(The Salvation Army)

"Years May Pass away
But your memory will
never fade away"
Mrs. M. David & Family
1700, Cotta Road,
Rajagiriya,
Colombo - 8

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org